**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 99/2023**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 20.02.2026.**

| | |
|---|---|
| **Name : சின்னசாமி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 1 to 6 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஆடு மேய்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும், என் உறவினர்கள். புகார்தாரர் குடும்பத்தாரும் எனக்கு உறவினர்கள். எதிரிகள் குடும்பத்தாருக்கும், புகார்தாரர் குடும்பத்தாருக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. புகார்தாரரை சின்னதாயி கெட்ட வார்த்தையால் கண்டாரஒலி என்று திட்டினார். குணசீலன் கெட்ட வார்த்தையால் திட்டிகிறாய் என்று கேட்டதற்கு அப்படி தான் திட்டுவேன் என்று தெவிடியா, கண்டார ஒலி பையா என்று திட்டிய போது செல்வராஜ் குணசீலனை இடது புறம் கை முட்டி மீதும், வயிற்றின் மீது எட்டி உதைத்ததாகவும், செல்வராஜ், கலைவாணி குணசீலனை கீழே தள்ளி நகத்தால் கீறிவிட்டார்கள். அருகிலிருந்தவர்கள் வருவதை பார்த்துவிட்டு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். காயம்பட்ட கந்தாயி, குணசீலன் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் நினைவில்லை. சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து 10, 11 மணியளவில் விசாரித்தார்கள். எதிரிகள் மீது இதே வழக்கில் சின்னத்தாயி அடித்ததாக வழக்கு நடக்கும் விவரம்

தெரியுமா என்றால் தெரியும். இரு தரப்பினரும் கைகலப்பு செய்தார்களா என்றால் ஆமாம். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். யார் சொல்லி சம்பவம் குறித்து தெரியும் என்றால் மருத்துவமனையில் கந்தாயி என்பவர் சொல்லி தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும். மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றார்கள் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

3) யார் யார் எந்தெந்த வண்டியில் சென்றார்கள் என்றால் இரு சக்கர வாகனத்தில் சென்றார்கள். இரு தரப்பிற்கும் என்ன பிரச்சனை என்றால் சொத்து சம்மந்தமான தகராறு ஆகும். கேள்விப்பட்டவாறு கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் இவ்வழக்கில் புகார்தாரர் உறவினர் என்தால் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இில்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.